கூடுதல் சார்பு நீதிமன்றம்,
கும்பகோணம்.

MCOP.No. 240/2019 நாள்– 06.08.2026 சாட்சி– ம.சா.1

( Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969)

சாட்சியின் பெயர் – சுகன்யா
சாட்சி ஆஜர். பிரமாணம் செய்யப்பட்டார்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கான நான் இழப்பீடு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபத்தில் எனது சகோதரர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதற்கு இழப்பீடு கோரி தனியாக கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எண்** MCOP. 239/ 2019 **என்றால் சரிதான். அதே விபத்தில் எனது தாயாருக்கு காயம்பட்டு அதற்கு இழப்பீடு கோரி** MCOP. 209/ 2019 **என்ற வழக்கு தாக்கல் செய்து கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை மசாஆ-** 1 **ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மசாஆ-** 2 **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மசாஆ-** 3 **மற்றும் மசாஆ-** 4 **ஆவணங்களின் அசல் குற்ற வழக்கில் உள்ளது. முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விலாசம் என்னுடைய விலாசம் தான் என்றால் சரிதான்.**

**முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடந்தது அதிகாலை** 3.40 **மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நாங்கள் பயணம் செய்த காரை ஓட்டிச் சென்றது எனது சகோதரர் வடிவரசன் என்றால் சரிதான். மேற்படி விபத்து தொடர்பாக மசாஆ-** 1 **முதல் தகவல் அறிக்கை தவிர**

**வேறு எந்த புகாரும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காரை ஓட்டி சென்றது வடிவரசன், விபத்தில் இறந்துபோனது மற்றொரு சகோதரரான பாலாஜி ஆகும்.**

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by his/her to be Correct.*

*S/d.(C. Sivakumar)*

*Additional Subordinate Judge,*
*Kumbakonam .*